40 ஆண்டுகளுக்குப் பிறகு

கனிமொழி ராஜாத்தி கருணாநிதியை சந்தித்த கழக முன்னோடி காசி!



சென்னை, நவ.7 -

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்களை, கழகத்தின் மூத்த முன்னோடியும், மதுரை சோழவந்தானைச் சேர்ந்த விவசாயியுமான 82 வயது காசி நேற்று முன்தினம் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

தி.மு.க. தொடங்கப்பட்ட நாள் முதல் கழகத்தின் அடிப்படை உறுப்பினராகத் தொடர்ந்து பயணித்து வரும் காசி, மிசா காலத்தில் சிறை வாசம் அனுபவித்தவர். இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகத்தின் பல்வேறு போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

இந்நிலையில், சென்னை சி.ஐ.டி. காலனியில் உள்ள கலைஞர் இல்லத்தில் கனிமொழி ராஜாத்தி கருணாநிதியைச் சந்தித்த அவருக்கு, கலைஞரின் திருவுருவச் சிலையை நினைவுப் பரிசாக வழங்கி சிறப்பித்தார் கனிமொழி.

அப்போது தனது பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்ட காசி, சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு இதே வீட்டில் உங்களைச் சந்தித்தி ருக்கிறேன். மதுரையில் நான் மூன்று பொதுக்கூட்டங்களை நடத்தியிருக்கி றேன் என்று கூறி, அந்தக் கூட்டங்களில் தீப்பொறி ஆறுமுகம் பங்கேற்ற புகைப் படத்தையும் காண்பித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், நான் ஐந்தாம் வகுப்பு வரை தான் படித்திருக்கிறேன். அதற்குப் பிறகு நான் பெற்ற அறிவெல்லாம் முரசொலி படித்ததன் மூலமாகக் கிடைத்ததுதான். நான் அதிகம் படிக்கவில்லை என்றாலும், எனது குடும்பத்தினர் அனைவரும் நல்ல கல்வியறிவு பெற்று உயர்ந்த நிலையை அடைந்துள்ள பெருமிதத்துடன் இன்று எனது தங்கையைச் சந்திக்க அழைத்து வந்திருக்கிறேன் என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

மேலும், பெரியாரைச் சோழவந்தான் பகுதிக்கு அழைத்து வந்து பொதுக்கூட்டம் நடத்தியதையும், அவர் அப்பகுதிக்கு வந்தபோது மாலை அணிவித்து வரவேற்றதையும் நினைவு கூர்ந்தார். பெரியாரின் நூல்களைப் படித்ததன் வாயிலாகவே தனது குடும்பத்தில் நிகழ்ந்த சாதி மறுப்புத் திருமணத்தை ஏற்றுக்கொண்டதாகவும் கூறினார்.

அதேபோல் 1951, 1952 காலகட்டத்தில் சோழவந்தான் தென்கரை திரையரங்கம் முன்பு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பெரியாரை நேரில் சந்தித்து அவரது உரையைக் கேட்ட அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டார்.

முன்னதாக இத்தனை ஆண்டுக்காலமாக கழகம் தொடர்பான பத்திரிகைச் செய்திகள், நிகழ்ச்சி விளம்பரங்கள், கணக்கு வழக்குக் குறிப்புகள் எனச் சிறிய துண்டுச் சீட்டுகளாக இருந்தாலும், அனைத்தையும் இன்று வரை பத்திரமாகச் சேகரித்து வைத்திருக்கிறார். அவற்றை எடுத்து வந்து கனிமொழியிடம் காண்பித்து மகிழ்ந்தார்.

அப்போது, தீப்பொறி ஆறுமுகம்தான் உங்களுக்குப் பிடித்தமான பேச்சாளரா என்று கனிமொழி கேட்டதற்கு, ஆமாம் என்று பதிலளித்த காசி, தான் சேகரித்து வைத்திருக்கும் புகைப்படங்களில் பெரும்பாலானவற்றில் தீப்பொறி ஆறுமுகம் இடம்பெற்றிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

முரசொலி வழியே அறிவைப் பெற்று, பெரியாரின் கொள்கைகளை வாழ்வில் ஏற்று, கழகத்தின் வரலாற்றைத் தனது நினைவுகளிலும் ஆவணங்களிலும் பாதுகாத்து வரும் 82 வயது கழக முன்னோடி யின் சந்திப்பு நெகிழ்ச்சியூட்டும் நிகழ்வாக அமைந்தது.



கோயம்புத்தூர் – வ.உ.சி. மைதானத்தில், திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற, "பெரியார் அறிவுலகம் கண்ட திராவிட நாயகருக்கு நன்றி பாராட்டு விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு – முன்னாள் அமைச்சரும், கரூர் மாவட்டக் கழகச் செயலாளருமான வி.செந்தில்பாலாஜி நினைவுப் பரிசு வழங்கினார். திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் மேடையில் உள்ளனர்.

தமிழ்நாடு அரசு பதிவுத் துறையைத் தனியார்மயமாக்குவதா? பல்லாயிரம் கோடி ரூபாய் வருவாயை அரசுக்குத் தரும்

பதிவுத் துறையில் தனியார் பெருநிறுவனங்கள் ஏன்?

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, நவ. 7-

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு அரசின் பதிவுத்துறை என்பது அரசுக்கு ஆண்டுதோறும் மாநில அரசுக்கு அதிக வருவாய் ஈட்டித்தருகிற துறையாகும். கடந்த 2025-2026 நிதியாண்டில் மட்டும் ரூ.25,546 கோடிகளுக்கு மேல் தமிழ்நாடு அரசுக்கு வருவாயை ஈட்டித் தந்துள்ளது. ஜிஎஸ்டி முறை அமலான பின்னர் மாநில அரசின் வரி அதிகாரங்களுக்கு உட்பட்டு இருக்கிற எஞ்சிய இனங்களில் மிக முக்கியமானது பதிவுத் துறை மூலம் கிடைக்கும் வருவாய்.

அத் துறையில் தனியார் நிறுவனங்களைப் பயன்படுத்துவதற்கான பணிகளைத் த.வெ.க. அரசு தொடங்கியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. பத்திரப் பதிவுத் துறையை மறைமுகமாகத் தனியார் மயமாக்கும் இந்த ஏற்பாடு கண்டனத்துக்குரியதாகும்.

சந்தேகத்திற்கிடமில்லாமல் தெரிய வருகிறது!

அண்மையில், மாதிரிப் பதிவு மய்யங்களை நடத்துவதற்குத் தனியார் நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம் என்று டெண்டர் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் அம்பத்தூர், திருவான்மியூர், தியாகராய நகர், செங்கல்பட்டு, கோவை ஆகிய 5 இடங்களில் சோதனை முயற்சியாக முதற்கட்டமாகவும், மேலும் 20 இடங்களில் இரண்டாம் கட்டமாகவும் தனியார் பத்திரப் பதிவு மய்யங்கள் அமைக்க அரசு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதாகவும் தெரிகிறது. முதலில் அய்ந்தாண்டுகள் சேவை வழங்கவும், பிறகு இரண்டாண்டுகள் நீட்டிக்கப்படவுமான வாய்ப்புடன் பதிவுத் துறையையே தனியார் மயமாக்குவதற்கான தொடக்கமே இது என்பது சந்தேகத்திற்கிடமில்லாமல் தெரியவருகிறது.

தமிழ்நாடு அரசின் பதிவுத் துறையைத் தனியார் மயமாக்க வேண்டிய அவசியம் என்ன? இதனால், பெரும் பெரும் கார்ப்பரேட் தனியார் நிறுவனங்கள் பயன்பெறுமே தவிர, அரசுக்கோ, பொதுமக்களுக்கோ, ஊழியர்களுக்கோ பயன் உண்டா? நியமனங்களில் சமூக நீதி, இட ஒதுக்கீடு இருக்காதே!



எந்தவொரு துறையையும் நவீனமயமாக்குவதும், கணினிமயமாக்குவதும், அதன் செயல்பாடுகளை தொழில்நுட்ப ரீதியாக எளிமையாக்குவதும் வரவேற்கத்தக்கது. முன்பே, அத்தகைய பணிகள் தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்குத் தனியாரிடம் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? ஒவ்வொரு பதிவுக்கும், முத்திரைத் தாள் கட்டணம், பத்திரப் பதிவுக் கட்டணங்களைத் தவிர, தனியாக, இப்பதிவுகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனங்களுக்குச் சேவைக் கட்டணம் கொடுக்க வேண்டும் என்பது பொது மக்களின் மீது சுமத்தப்பட்டும் கூடுதல் சுமை அல்லவா? அதிலும், சாதாரண சேவைக் கட்டணம் ரூ.2090-இல் தொடங்கி, தட்கல் பிரீமியம் சேவைக் கட்டணம் – ரூ.10,630 வரை தனியார் நிறுவனங்கள் வசூலிக்கலாமாம்.

தமிழ்நாடு முழுவதும் ஓர் ஆண்டுக்கு சராசரியாக 35 லட்சம் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பதிவுக் கட்டணம் ரூ.2000 முதல் ரூ.10,000 வரை – சராசரியாக ரூ.5,000 என்று கணக்கிட்டால் கூட, ரூ.1,750 கோடியிலிருந்து ரூ.2,000 கோடி வரை தனியார் நிறுவனத்துக்குச் செல்லும். அதில் 25 முதல் 35 சதவிகிதம் மட்டுமே அரசுக்கு அத் தனியார் நிறுவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லப்படுகிறது. எஞ்சிய சுமார் 1,300 கோடி ரூபாயை மக்களிடமிருந்து பறித்து, தனியாருக்குத் தாரை வார்க்க வேண்டிய அவசியம் என்ன? இந்த வருவாயைக் கணக்கிட்டு, எந்தப் புதிய வசதியையும் தமிழ்நாடு அரசே செய்துவிடலாமே! சார் பதிவாளர் அலுவலகங்களின் எண்ணிக்கையை, பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தலாமே! அதன் பலனாக நேரடியாக வேலைவாய்ப்பைக் கூட உருவாக்கலாமே!

அது மட்டுமல்லாமல், கடந்த தி.மு.க. ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட 3.0 என்ற முறையிலான 'நேரடியாக வரவேண்டிய அவசியம் இல்லாமல் பதிவு செய்யும் முறை' என்பது பல்வேறு சிக்கல்களுக்கும், முறைகேடுகளுக்கும் வழிவகுக்கும், மேலும் பல சிக்கல்கள் இருப்பது குறித்து அன்றைய பதிவுத் துறை அமைச்சரிடமே முறையிடப்பட்டதால், அதன் ஆபத்தைப் புரிந்து கொண்டு அத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துவதிலிருந்து, பிரச்சினைகளைச் சரி செய்வதற்காகத் தற்காலிகமாக நிறுத்திவைத்தது தி.மு.க. அரசு.

ஆனால், பிரச்சினைகள் குறித்து கவலை கொள்ளாமல், அதை இப்போது நடைமுறைப்படுத்தியுள்ளது த.வெ.க. அரசு. ஆள் இல்லாமல் பதிவேற்றும் முறையில் ஏராளமான சிக்கல்கள் எழ வாய்ப்பிருப்பதைக் குறித்து பத்திரப் பதிவு ஆவண எழுத்தர்கள், வழக்குரைஞர்கள், பட்டயக் கணக்காளர்கள் உள்ளிட்டோர் விரிவாக பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டிப் போராடி வருகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் மட்டுமல்ல, இதன் மூலம் மக்களின் சொத்துப் பாதுகாப்புக்கே ஆபத்து எழும் என்று அச்சம் தோன்றியுள்ளது. அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ன என்று எழுந்துள்ள கேள்விக்கு, இதுவரை அரசிடமிருந்து பொறுப்பான பதில் எதுவும் வரவில்லை. சுயதொழில் லாகச் செய்துவரும் பல்லாயிரம் பேரின் வாழ்க்கை இப்போது ஏதோ ஒரு தனியார் கார்ப்பரேட் நிறுவனத்தின் கைகளுக்குப் போகப் போகிறது.

ஆங்கிலம் அறியாத மக்களுக்கான அநீதி அல்லவா?

இன்னொருபுறம், சொத்துப் பதிவின் போது, சொத்து விவரங்களை (Schedule) ஆங்கிலத்தில் தான் பதிவு செய்ய முடிகிறது என்று பல சார் பதிவாளர் அலுவலகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழில் செய்யுங்கள் என்று கேட்டதற்கு, 'அதற்கு வாய்ப்பில்லை, ஆங்கிலத்தில் மட்டும் தான் பதிவு செய்ய முடிகிறது' என்று அலுவலர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்று செய்தி வருகிறது.

உயர்நீதிமன்ற நடைமுறைகளே தமிழில் வரவேண்டும் என்று பல ஆண்டுகளாக நாம் போராடிக் கொண்டிருக்கும் நிலையில், ஆங்கிலத்தில் மட்டுமே சொத்து விவரங்களைப் பதிவு செய்ய முடியும் என்று தொழில்நுட்பத்தைக் காரணம் காட்டி நெருக்கடி தருவது, ஆங்கிலம் அறியாத மக்களுக்கான அநீதி அல்லவா?

புதிய தொழில்நுட்பங்களை, புதிய முறைகளைக் கண்ணை மூடிக் கொண்டு நாம் எதிர்ப்பவர்கள் அல்லர். ஆனால், அதனால் குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது என்று சந்தேகம் எழும்போது, அதைச் சரி செய்ய வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

அத்துடன், வருவாய் தரக் கூடிய அனைத்துத் துறைகளையும் தனியாருக்குத் தாரை வார்த்துவிட்டு, மக்களையும், அரசையும் ஒரு சேர நெருக்கடிக்கு உள்ளாக்கி அதன் மூலம் பயன் அடையப்போவது யார் என்பது மிக முக்கியமான கேள்வியாகும்.

பதிவுத் துறையில் தனியார் மயம் என்பதும், ஆங்கில மயம் என்பதும் அவசியமற்றது; முறைகேடுகளுக்கு வழியமைக்கக் கூடியது; கண்டிக்கத்தக்கது; பொதுமக்களின் நலன்களைப் பலி கொடுப்பது. இதனை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசையும், முதலமைச்சரையும் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் ஒரு திரைப்படத்தின் சிறப்புக் காட்சியின் போது ஏற்பட்ட துயரக் காட்சிகள் தமிழ்நாட்டிலும் நடக்க வேண்டும் என விஜய் அரசு ஆசைப்படுகிறதா?

பொதுமக்களின் பாதுகாப்பை பணயமாக வைத்து வழங்கப்பட்டுள்ள 6 மணிக் காட்சி அனுமதிக்கு கண்டனம்!

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் அறிக்கை!

சென்னை, நவ. 7-

தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இ.பரந்தாமன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

புதிய படம் வெளியாகும் நாளில் இருந்து ஒரு வாரத்துக்கு தினமும் காலை 6 மணி முதல் மறுநாள் அதிகாலை 2.30 மணி வரை 6 காட்சிகளை திரையிடலாம் என்றும், சனி ஞாயிறு, உள்ளூர் பண்டிகை, பொது விடுமுறை நாள்களிலும் 6 காட்சிகளைத் திரையிட அனுமதி வழங்கியிருக்கிறது தவெக அரசு.

இளைஞர் சமுதாயத்தையும், தமிழ்நாடு கலாச்சாரத்தையும் சீரழிக்கும் நோக்கில் பொழுது விடிந்த வுடன் புதிய திரைப் படங்களை தியேட்டர்களில் திரையிடலாம் என்று த.வெ.க. அரசு பிறப்பித்துள்ள உத்தரவு பேரதிர்ச்சியளிக்கிறது.

நான் முதல்வன், புதுப் புது நூலகங்கள், தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் என்றெல்லாம் மாணவர்களின் அறிவுசார் தமிழ்நாட்டின் பக்கமாக அழைத்துச் செல்ல திராவிட மாடல் ஆட்சியில் வியத்தக திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால், தவெக ஆட்சியிலோ "பொழுது விடிந்ததும் சினிமா" "காலை 6 மணி முதல் ஒரு நாளைக்கு 6 காட்சிகள் திரையிடலாம்" என உத்தரவு அளித்து, ஒரு Generational Destructionயைச் செய்யத் தொடங்கி விட்டது!



இதே முதலமைச்சர் விஜய்யின் லியோ பட ரீலீஸின் போதுதான் ஒரு திரையரங்கில் காலை 6 மணிக் காட்சியில் ஏற்பட்ட நெரிசல், கண்ணாடிகள் உடைப்பு, கலாட்டா என மக்கள் பதற்றத்தில் மூழ்கினார்கள். அப்படியொரு ஆபத்தை தவிர்த்திடவே திராவிட மாடல் ஆட்சியில் காலை 6 மணி காட்சிக்கு மட்டுமல்ல, ஒரு நாளைக்கு 6 காட்சிகளுக்கு தடை விதிக்கப்பட்டது. அன்றைக்கு "7 மணி காட்சிக்கு அனுமதி கேட்டு" லியோ படத் தரப்பினர் மாண்பமை உயர்நீதிமன்றத்திற்கு சென்ற போது கூட பொதுமக்கள் பாதுகாப்பு முக்கியம் என்பதையே உயர்நீதிமன்றம் வலியுறுத்தியது. ஆகவே தான் 6 மணி அல்லது 7 மணிக் காட்சியோ, ஒரு நாளைக்கு 6 காட்சிகளோ அனுமதிக்க முடியாது என் பதில் திராவிட மாடல் அரசு உறுதியாக இருந்தது.

ஆனால் ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் விஜய் "6 மணி காட்சி மற்றும் ஒரு நாளைக்கு 6 காட்சிகள்" என புதிய திரைப்படங்களுக்கு உத்தரவிட்டுள்ளது மிகக் கொடுமையான கலாச்சாரத் தாக்குதல் மட்டுமல்ல, நீதிமன்ற உத்தரவுக்கு எதிரான செயலும் கூட!

அடுத்தடுத்துக் காட்சிகள் திரையிடப்படுவதால், மறு காட்சி தொடங்குவதற்கு இடைப்பட்ட நேரம் மிகக் குறைவாக இருக்கும். அதனால், தியேட்டரை விட்டு வெளியே வருகிற வர்களும் உள்ளே நுழைப வர்களும் முட்டி மோதி அதனால் நெரிசல் ஏற்பட்டு, உயிரிழப்புகள் ஏற்பட லாம். ஹைதராபாத்தில் ஒரு திரைப்படத்தின் சிறப்புக் காட்சியின் போது கூட்ட நெரிசலில் ஒரு பெண் உயிரிழந்த சம்பவம் இந்தியா முழுவதும் அறியப்பட்ட நிகழ்வு. 2023ல் ஒரு திரைப்பட ரிலீஸின் போது சென்னை திரையரங்கம் அருகே, நள்ளிரவு 1 மணி சிறப்பு காட்சியைக் கொண்டாட வந்த ரசிகர் லாரியின் மீது ஏறி நடனமாடி கீழே விழுந்து உயிரிழந்தார். இப்படி ஏதும் நடந்து விடக்கூடாது என் பதுதான் திராவிட மாடல் அரசின் நோக்கமாக இருந்தது. ஆனால் இப்போது விஜய் அரசு 6 காட்சிகள் அனுமதித்தித்து அது போன்ற துயர சம்பவங்கள் நடக்க வேண்டும் என ஆசைப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது. தமிழ் நாட்டின் பெருமைகளை, பண்பாட்டை சீரழிக்கும் இப்படியொரு முன்னெடுப்பை அதுவும் பொதுமக்களின் பாதுகாப்பை பணயமாக வைத்து விஜய் அரசு எடுத்திருப்பது கடும் கண்டனத் திற்குரியது.

புதுப்படம் வெளியாகும் போது மற்ற மாநிலங்களில் காலை ஆறு மணிக்கு காட்சிகள் திரையிடுவதால் தமிழ்நாட்டில் முன்கூட்டியே திரை விமர்சனம் வெளியாகி, படத்தின் வெற்றி வாய்ப்பை பாதிக்கிறது என்கிற நோக்கத்தில் தமிழ்நாடு நடப்பு சினிமா தயாரிப்பாளர் சங்கம் சொல்லியிருக்கிறது. மனித உயிர்களை விட எந்த வகையிலும் திரைப்படத்தின் வெற்றி உயர்ந்ததில்லை. ஹைதராபாத் துயர நிகழ்வுக்கு பிறகு மற்ற மாநிலங்களில் கடுமையான கட்டுப்பாடுகள் விதித்து வருகிறார்கள். திரைப்படத்தின் வெற்றியை விட அடுத்த தலைமுறை வாழ்க்கையின் வெற்றிதான் முக்கியம் என்பதை இந்த அரசு உணர வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சிவில் சர்வீஸ் முதன்மைத் தேர்வு முடிவுகள்!

தமிழ்நாட்டில் இருந்து 168 பேர் வெற்றி!

சென்னை, நவ. 7-

சிவில் சர்வீஸ் முதன்மைத் தேர்வு முடிவுகளை ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ளது. தமிழகத்தில் இருந்து 168 பேர் ஆளுமைத் தேர்வுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ். உள்ளிட்ட குடிமைப் பணிகளுக்கு ஆண்டுதோறும் தேர்வுகள் முதல் நிலை, முதன்மை, ஆளுமை என 3 கட்டங்களாக நடத்தப்பட்டு வருகிறது. ஆயிரத்து 16 காலிப் பணியிடங்களுக்கான யு.பி.எஸ்.சி சிவில் சர்வீஸ் முதன்மைத் தேர்வு, கடந்த ஆகஸ்ட் 21 முதல் 30 வரை நடைபெற்றது. முதற்கட்டத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில், மொத்தம் 13 ஆயிரத்து 343 பேர் முதன்மைத் தேர்வில் பங்கேற்றனர். தற்போது முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களின் பட்டியலை ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ளது.

தி.மு.க. மாடல் ஆட்சியில் பயிற்சி!

இதில், 2ஆயிரத்து 526 பேர் தேர்ச்சி பெற்று, அடுத்தகட்டமாக ஆளுமைத் தேர்வுக்கு தகுதிபெற்றுள்ளனர். தமிழ்நாட்டிலிருந்து 168 பேர் ஆளுமைத் தேர்வுக்கு தகுதி பெற்றுள்ளனர். இதில், 79 பேர் திராவிட மாடல் ஆட்சியின் போது அமைக்கப்பட்ட அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் பயின்றவர்கள் ஆவர். ஆளுமைத் தேர்வுக்கு தகுதிபெற்றவர்கள், நவம்பர் 11 முதல் நவம்பர் 25 ஆம் தேதி மாலை 6 மணிக்குள் தேர்வாணையம் கோரிய சான்றிதழ்கள், ஆவணங்கள் மற்றும் பிற தகவல்களை யுபிஎஸ்சி வலைதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஆளுமைத் தேர்வு நடைபெறும் தேதிகள் விரைவில் அறிவிக்கப்படும்.

கழக இளைஞர் அணியின் மண்டலம் - 2க்கு உட்பட்ட மாவட்ட - மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!









கழக இளைஞர் அணியின் மண்டலம் 2-க்கு உட்பட்ட மாவட்ட- மாநகர அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 04.11.2026 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பட்டினத்தில் மாநிலத் துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் தலைமையில், பிரபு கஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் பங்கேற்று, இளைஞர் அணியினருக்கு ஆலோசனைகளை வழங்கினார்.மேலும் இக்கூட்டத்தில், 'கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் 50-வது பிறந்தநாள் விழா', 'எதிர் வரவிருக்கும் இடைத்தேர்தல் பணிகள்', 'இளைஞர் அணியின் சமூக வலைதளச் செயல்பாடுகள்' மற்றும் 'இளைஞர் அணியின் ஆக்கப்பணிகள்' ஆகியவை குறித்து ஆலோசிக்கப்பட்டது. திருவள்ளூர், கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட - மாநகர அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.